நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மழையை எதிர்நோக்கியுள்ள முந்திரி விவசாயிகள்

- ஜீவ. இராம.ஸ்ரீநிவாஸன் -

First Published : 01 May 2012 01:01:33 AM IST



பண்ருட்டி, ஏப். 30: புயலில் தப்பிய முந்திரி கிளைகளில் உள்ள பிஞ்சுகளாவது கைக்குக் கிடைக்குமா? என்ற ஏக்கத்தில் முந்திரி விவசாயிகள் உள்ளனர்.

இந்த ஆசை நிறைவேற வேண்டுமெனில் வருண பகவான்தான் கருணை காட்ட வேண்டும் என வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் முந்திரி விவசாயிகள் கூறினர்.

கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி மற்றும் விருத்தாசலம் பகுதியில் 28,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரிக் காடுகள் உள்ளன. இக்காடுகளில் இருந்து ஆண்டுதோறும் 22,168 மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

இதை அடிப்படையாகக் கொண்டு பண்ருட்டி பகுதியில் பல்வேறு முந்திரி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. முந்திரிப் பயிர் ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் ஆண்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அன்னிய செலாவணி ஈட்டப்பட்டது.

மேலும் முந்திரி சார்பு தொழில் மூலம் (முந்திரி எண்ணெய், புண்ணாக்கு) பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இயங்கி வந்தன.

இதனால் கிராமப் பகுதியில் ஏராளமான ஆண்களும், பெண்களும் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புப் பெற்று வந்தனர்.
இதனால் இப்பகுதியில் கிராமப் பொருளாதார வளர்ச்சி சிறப்படைந்து இருந்தது.
ஆனால் கடந்த பல ஆண்டுகளாகவே வெயில், கனமழை, கடும் பனிப்பொழிவு உள்ளிட்ட பல்வேறு வகையில் மகசூல் பாதிக்கப்பட்டதால் முந்திரி விவசாயிகள் சோதனைகளை அனுபவித்து வந்தனர்.
இருப்பினும் பாதகம் இல்லாத அளவுக்கு மகசூல் கிடைத்ததால் இவர்களின் வாழ்வாதாரம் திருப்திகரமாக இருந்து வந்தது.
முந்திரி மற்றும் பலா ஒன்றையே முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டு ஆண்டாண்டு காலமாக இப்பகுதியைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர்.
அவர்களின் ஜீவாதாரம், குழந்தைகளின் கல்வி, திருமணம் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் முந்திரி மற்றும் பலா கைக் கொடுத்து வந்தது. இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் புயல் தாக்கியதில் கடலூர் மாவட்டமே சின்னாபின்னமானது. இந்த புயலில் கடலூர், பண்ருட்டி பகுதியில் இருந்த முந்திரி, பலா உள்ளிட்ட அனைத்து மரங்களும் வேரோடு பெயர்ந்து விழுந்தன. பண்ருட்டி என்றாலே பலாப்பழம்தான் என அனைவருக்கும் தெரியவரும். ஆனால் புயலில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட பலா மரங்கள் அழிந்துவிட்டன.
புயலால் முந்திரிக் காடுகள் கடுமையாக சேதம் அடைந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. இத்துயர சம்பவம் முந்திரி விவசாயிகளை நிலைகுலைய வைத்தது.
சம்பவம் நடந்து நான்கு மாதங்கள் ஆன நிலையில் இன்னமும் முந்திரி விவசாயிகள் இந்த பாதிப்பில் இருந்து மீளவில்லை.
அரசு சார்பில், அளிக்கப்பட்ட நிவாரணமும் போதவில்லை, அதுவும் பாதிக்கப்பட்ட அனேக விவசாயிகளுக்கு முறையாக கிடைக்கவில்லை.
இந்நிலையில் எஞ்சிய முந்திரி மரக்கிளை மற்றும் சிறு மரங்களில் பூப் பூத்துள்ளன. இதனால் 20 முதல் 30 சதவீதமாவது முந்திரிக் கொட்டை கிடைக்கும் என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.
ஆனால் தற்போது அடிக்கும் வெயிலில் முந்திரிப் பிஞ்சுகள் காய்ந்து கருகி வருகிறது.
எஞ்சியதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த முந்திரி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
கடந்த 4 நாட்களாக லேசான மழை ஆங்காங்கே பெய்துள்ளது. இதனால் எந்த பயனும் இல்லை. இப்போதைய சூழ்நிலையில் பூமியில் தண்ணீர் நிற்கும் அளவுக்கு கோடை மழை பெய்தால், உள்ளதாவது கைக்குக் கிடைக்கும் என்ற ஏக்கத்தில் மழையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர் முந்திரி விவசாயிகள்.

## கால்நடைகளுக்கு நாளை குடல் புழு நீக்க முகாம்

First Published : 01 May 2012 01:31:23 PM IST

தருமபுரி, ஏப்.30: தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசு வழங்கிய இலவசக் கால்நடைகளுக்கான மாபெரும் குடல்புழு நீக்க முகாம் புதன்கிழமை (மே 2) நடைபெறுகிறது.

தமிழக அரசின் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில், மாவட்டத்தில் 2011-12-ம் நிதியாண்டுக்கு 150 பசுக்களும், 3,190 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஓராண்டுக்கான இலக்கு 5 மாதங்களிலேயே முடிக்கப்பட்டுவிட்டது. அரசு வழங்கிய கால்நடைகளை சிறப்பாகப் பராமரித்து வருவோருக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இந்தக் கால்நடைகளுக்கு ஏற்கெனவே கோமாரி நோய் தடுப்பூசி அளிக்கப்பட்டுள்ளது.

இப்போது, குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது. ஆடு, மாடுகள் மற்றும் அவற்றின் குட்டிகளுக்கு உடல் எடை, உற்பத்தி திறன், நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்க குடல்புழு நீக்க சிகிச்சை அவசியமானது. எனவே, கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ளது.

ஏ. கொல்லஹள்ளியில் புதன்கிழமை நடைபெறும் முகாமை ஆட்சியர் ஆர். லில்லி தொடங்கி வைக்கிறார். அரசு வழங்கிய இலவச ஆடு, மாடுகளைப் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாது, கால்நடை வளர்ப்போர் அனைவரும் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து இலவசமாக சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 49.33 அடி

First Published : 01 May 2012 01:04:23 PM IST

ஈரோடு, ஏப்.30: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 49.33 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க அளவு 105 அடி. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 137 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 550 கனஅடியும், வாய்க்காலில் 2,219 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 4.27 டி.எம்.சி.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## ஏழை, எளிய விவசாயிகளைக் காப்பாற்றும் ஆடுதுறை 37 நெல்

பதிவு செய்த நாள் : மே 02,2012,00:00 IST



தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பல்வேறு குணங்களைக் கொண்ட ஆடுதுறை நெல் ரகங்களைக் கண்டுபிடித்துள்ளது. அதில் அதிக சவுகர்யங்கள் இல்லாத, சிறு விவசாயிகளுக்கு ஏற்றது ஆடுதுறை 37 நெல் ரகமாகும். பொதுவாக கோடையில் நெல் சாகுபடியை செய்வது மிகக் கடினமானது. இந்தக் கோடையிலும் நல்ல பலனைத் தருவது ஆடுதுறை 37 ரகமாகும். சிறு விவசாயிகள் இதனை சாகுபடி செய்யலாம். வைகாசி பட்டத்தில் நெல் சாகுபடி செய்வது சிறிது கடினமானாலும் வைகாசியும் நெல் சாகுபடி பட்டம்தான். இந்த மாதத்தில் கோடை மழை நல்லபடியாக பெய்து கிணறுகளிலும் தண்ணீர் இருப்பின் நெல் சாகுபடியை செய்ய முடியும். மேலும் வைகாசி பட்டத்தில் சாகுபடிக்கு ஏற்ற நெல்ரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கடும் இடர்ப்பாடுகளை கொண்ட இப்பட்டத்தில் குறுகிய கால ஆடுதுறை 43 ரகத்தை சாகுபடி செய்ய இயலாது. ஆனால் இதே பட்டத்தில் ஆடுதுறை 43 ரகத்தைவிட அதிக மகசூலைக் கொடுக்கும் குறுகிய கால ஆடுதுறை 37 ரகம் உள்ளது. இந்த ரகம் கோடையில் பிரச்னைகளை சமாளிக்கும் திறன் கொண்டதால் இதனை சாகுபடி செய்யலாம். ஆடுதுறை 37 ரகத்தில் நெல் அரவையில் அரிசி அவுட் டேர்ன் 60 சதம் வரை கிடைக் கின்றது. அரிசி குண்டாக இருக்கும். இதர ரகங்களில் 56 சதவீதம் கிடைப்பதே சிரமம் ஆகும். ஆடுதுறை 37 ரகத்திற்கு கிராமங்களில் மதிப்பு இருப்பதற்கு காரணங்கள் உள்ளன. ஆடுதுறை 37 ரகத்தின் அரிசியை குறுநில விவசாயிகள், கூலி வேலை செய்பவர்கள் அதிகம் விரும்பு கின்றனர். கரும்பு அறு வடையின்போது வேலைக்கு

அமர்த்தப்பட்ட ஆட்கள் நிலச் சொந்தக் காரர்களை கூலியாக பணம் கொடுக்காமல் ஆடுதுறை 37 அரிசியை கூலியாக கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றனர். ஏழை மக்கள் ஆடுதுறை 37 அரிசியை விரும்புவதற்கு முக்கிய காரணம் இதன் பழைய சோறு கெட்டுவிடாமல் இருப்பதே ஆகும். ஆடுதுறை 37 ரகத்தில் நெல் மகசூல் கணிசமாக இருப்பதோடு வைக்கோல் மகசூலும் அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆடுதுறை 36 போன்ற ரகத்தில் ஏக்கரில் 200 பிரி வைக்கோல் கிடைக்கும்போது ஆடுதுறை 37 ரகத்தில் 400 பிரி கிடைக்கின்றது. இதர குறுகிய கால ரகங்களைப் போல் ஆடுதுறை 37 ரகம் (வயது 108 நாட்கள்) பூச்சி, வியாதிகளால் தாக்கப்படுவதில்லை. இந்த நெல் ரகத்தின் நெல்மணிகள் உருண்டை வடிவத்தில் நல்ல எடை உள்ளதாகவும் இருப்பதினால் கோடையில் உஷ்ணக் காற்றினால் பாதிக்கப் படுவதில்லை.

**விவசாயி ஒருவரது அனுபவம்**: கடும் வறட்சி பகுதியில் விவசாயி ஒருவர் வைகாசியில் ஆடுதுறை 37 ரகத்தை சாகுபடி செய்தார். இவர் வைகாசியில் பின் பகுதியில் நாற்றுவிட்டு ஆனியில் நாற்றுக்களை வயலில் நட்டார். ஆடுதுறை 37 ரகத்தில் விதைத்தூக்கம் உள்ளதால் விவசாயி விதையை சற்று கூடுதலாக உபயோகித்தார். நாற்றங் காலில் மூன்றாங்கொம்பு நாற்றாக விதைத்தார். நாற்றங்காலுக்கு எருக்கந்தழை 6 சால் கலப்பை உழவும், நான்கு சால் பட்லர் ஓட்டியும் கடைசி உழவின்போது 8 கிலோ டி.ஏ.பி. உரமும் போட்டார்.

நடவு வயலில் முன்னால் சாகுபடி செய்யப்பட்டிருந்த உலர்ந்த செடிகள் அதிகம் இருந்தன. நடவு வயலில் 6 சால் கலப்பை உழவு செய்து வேர்க்கடலை செடிகள் பூமியில் அமுக்கப் பட்டது. பிறகு 2 சால் பட்லர் உழவு செய்யப்பட்டது. கடைசி உழவின்போது காம்ப்ளக்ஸ் உரம் 17:17:17 ஏக்கருக்கு 2 மூடைகள் இடப்பட்டன. இதோடு ஏக்கருக்கு அரை மூடை யூரியா இடப்பட்டது. பிறகு 30-34 நாட்கள் வயதுடை நாற்றுக்கள் குத்துக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் நடப்பட்டன. நாற்றினை நடுவதற்கு முன் வயலில் பொடி செய்யப்பட்ட 10 கிலோ ஜிங்க் சல்பேட் தூவப்பட்டது. நடவு செய்த 3ம் நாள் ஏக்கருக்கு ஒரு லிட்டர் வீதம் சாட்டர்ன் களைக்கொல்லி இடப்பட்டது.

நடவு நட்ட 10ம் நாள் 20 கிலோ யூரியா, 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, நடவு நட்ட 17ம் நாள் 10 கிலோ யூரியா, 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, நடவு நட்ட 2ம் நாள் ஒரு களை + 10 கிலோ யூரியா + 15 கிலோ பொட்டாஷ், நடவு நட்ட 40ம் நாள் 20 கிலோ யூரியா + 5 கிலோ பொட்டாஷ் இடப்பட்டன. மேற்கண்ட உரங்களை மண் பரிசோதனை செய்து அதில் கிடைத்த சிபாரிசுப்படி விவசாயி இட்டார். பயிர் நட்ட 87வது நாள் அறுவடை செய்யப்பட்டது. ஏக்கரில் 80 கிலோ மூடைகள் 30 (மொத்தம் 2,400 கிலோ) மகசூலாகக் கிடைத்தது. ஏக்கரில் ரூ.800 மதிப்புள்ள வைக்கோலும் கிடைத்தது.

பொருளாதாரம்:

மூடை விலை ரூ.600 வீதம் 30 மூடை விலை - ரூ.18,000. வைக்கோல் மதிப்பு ரூ.800. சாகுபடி செலவு ரூ.10,000. நிகர லாபம் ரூ.8,000.
கடும் கோடை, வறட்சி போன்ற சூழ்நிலைகளில் ரூ.8,000 லாபத்தைக் கொடுத்த ஆடுதுறை 37 ரகம் வைகாசி பட்டத்திற்கு சிறந்தது என்பதை காட்டுகின்றது.-எஸ்.எஸ்.நாகராஜன்

## சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : மே 02,2012,00:00 IST



**துரிதமாக வேகவைக்கக்கூடிய அரிசி**: பாரம்பரிய முறையில் அரிசியைச் சமைக்க குறைந்தது 30 நிமிடம் முதல் 40 நிமிடங்கள் வரை ஆகிறது. அரிசியைக் களைந்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குக்கரிலோ, பாத்திரத்திலோ வைத்து வேகவைக்கப்படுகி றது. ஆனால் அரிசியை எடுத்து வெந்நீரில் போட்டு சில நிமிடங்கள் வரை வைத்திருந்தாலே போதும் சாதம் தயார். இந்த தொழில்நுட்பத்திற்காக மேற்கொண்ட ஆய்வில் மூன்று ரக அரிசிகள் (பச்சரிசி மற்றும் புழுங்கலரிசி) ஏ.எஸ்.டி.16, ஏ.டீ.டி.45, ஏ.டீ.டி.36 பயன்படுத்தப்பட்டன. இந்த அரிசி வகைகளை சுத்தம் செய்து தகுந்த முறையில் பதப்படுத்தி பின் உலர்த்தியில் உலர்த்தப் பட்டன. அவ்வாறு உலர்த்தப் பட்ட அரிசியை பாலிதீன் பைகளில் பாக் செய்யப்பட்டு அறை வெப்பத்தில் வைத்தபோது ஆறு மாதம் வரை தன்மை மாறாது நன்றாக இருந்தது.
**தயார் நிலை சாதம் தயாரித்தல்**: இவ்வாறாக உலர்த்தப்பட்ட அரிசியை 13 நிமிடம் (பச்சரிசி), 15 நிமிடம் (புழுங்கல் அரிசி) மட்டும் வெந்நீரில் ஊறவைத்தால் சாதம் தயாராகிவிடும். உலர்த்தப்பட்ட அரிசி சாதங்கள் தயாரித்து பார்த்ததில் எலுமிச்சை சாதம், தக்காளி சாதம், புளிசாதம் போன்றவை செய்ய ஏற்றதாக இருந்தது. இரண்டு நிமிட நூடுல்ஸ் போன்று 15 நிமிடத்தில் அடுப்பில் வைத்து சமைத்தால் சாதம் தயார். (அதனால் எரிபொருள் சிக்கனம் மற்றும் வேலைப்பளு குறைகிறது) என்பது பெண்களுக்கும் இத்தொழில்நுட்பம் தொழில் முனைவோருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இத்தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி மற்றும்

பழங்களிலிருந்து ஜாம், பழமிட்டாய் மற்றும் குளிர்பானங்கள் தயாரித்தல், ஊறுகாய், சாஸ், நார்ச்சத்து மிக்க நூடுல்ஸ், சேமியா, மசாலாபொடி வகைகள், சத்துமாவு தயாரித்தல் போன்றவை பெற மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
(விவசாயக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகம்) அணுகலாம்.
(**தகவல்**: கு.குருமீனாட்சி, ச.காஞ்சனா, ஜெ.தேவிப்பிரியா, மதுரை மனையியல்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்,
மதுரை-625 104).

**நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறை**: ஒரு எக்டருக்கு 249 டன் கரும்பு மகசூல் பெறலாம் என தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழக சோதனைத் திடல்கள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள மொத்த சாகுபடி பரப்பு 3.06 லட்சம் எக்டரில் சராசரி விளைச்சல் எக்டருக்கு 105 டன் ஆகும். ஆனால் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையை பின்பற்ற தொடங்கியபின், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சாகுபடி அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்ட விவசாயி ஒருவர் ஒரு ஏக்கருக்கு 93.8 டன் கரும்பு மகசூல் பெற்று சாதனை படைத்துள்ளார். எனினும் அவர் இரண்டு கணுக்கள் உள்ள கரணைகளை
விதைத்ததால் போக்குவரத்திற்கு அதிகமாக செலவு செய்துள்ளார். ஆனால் நீடித்த நிலைத்த சாகுபடியில் ஒரு கணு கரணை பயிரிடும் முறைமூலம் 250 கிலோ கரணைகள் மட்டும் ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தி உற்பத்தி செலவுகளை குறைக்கலாம். மரபாக கரும்பு பயிரிடும் விவசாயிகளும் இந்த நவீன முறையை கற்று பயன்பெறலாம்.
விவசாயிகள் ஜே 86032 கரும்பு ரகத்தைப் பயிரிட்டு வருகின்றனர். இந்த ரகம் சிவப்பு வேர் அழுகல் நோய் தாக்கக்கூடியது. புதிய கரும்பு ரகங்களான கோ.சி.24, எஸ்.ஜே.7 ஆகிய ரகங்களைப் பயிரிட வேண்டும். கோ.சி.24 ரகம் அதிக விளைச்சலாக எக்டருக்கு 228 கரும்பு மகசூல் தருகிறது. நீடித்த நிலைத்த சாகுபடி முறை மூலம் எக்டருக்கு 300-350 டன் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த ரகம் இயந்திர அறுவடைக்கு உகந்தது. மேலும் இந்த ரகத்திலிருந்து 12 சதவீதம் சர்க்கரை உற்பத்தி செய்யலாம். களர் மண்ணில் வளரும் இயல்புடையது. எஸ்.ஜே.7 ரகத்தில் 13.6 சதவீதம் சர்க்கரை உற்பத்தி செய்யலாம். ஆனால் தற்போது உள்ள ரகங்களிலிருந்து சர்க்கரை ஆலைகளில் 10 சதவீதம் மட்டுமே சர்க்கறை பெறப்பட்டு வருகிறது.
உழவர்கள் சொட்டு உரப்பாசன முறையைப் பயன்படுத்தி சிக்கன நீர் நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும்.
(**தகவல்:** முனைவர் ப.முருகேச பூபதி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003, பிப்ரவரி 13, 2012ம் நாள் ஆற்றிய துவக்க உரை, த.வே.ப.கழகம், கோவை)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## உளுந்து பயிரைத் தாக்கும் மஞ்சள் தேமல் நோய்!

பதிவு செய்த நாள் : மே 02,2012,00:00 IST

கோடை உளுந்து சாகுபடியாளர்களின் கவனத்திற்கு, உங்கள் உளுந்துப் பயிரில் இளம் இலைகளில் மஞ்சள் நிற தேமல் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றனவா என்று கவனியுங்கள். மஞ்சள் தேமல் நோய் தாக்குதலுக்குட்பட்ட பயிரின் இலைப்பரப்பில் முதலில் சிறிய புள்ளிகள் தோன்றி படிப்படியாக மஞ்சள் நிறப்படலங்களாக மாறிவிடும். உளுந்து சாகுபடியில் மஞ்சள் தேமல் நோய் மிக முக்கியமானதாகும். இந்த நோயானது உளுந்தை மட்டுமின்றி பச்சைப்பயறு, துவரை மற்றும் சோயாமொச்சை போன்றவற்றை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.
இந்த நோயின் அறிகுறிகளான மஞ்சள்நிற தேமல் படலங்கள் முதன் முதலில் இளம் இலைகளில்தான் காணப்படும். இந்த நோயின் பாதிப்புக்குட்பட்ட பயிர் முதிர்ச்சியடைய காலதாமதமாகும். மேலும் குறைந்த அளவே பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் சிறிய அளவிலும் உருமாறியும் காணப்படும். மஞ்சள் தேமல் நோயானது செடியின் குறைந்த வயதில் (பூக்கும் முன்) தாக்கும்பொழுது பயிரானது காய் பிடிக்காமலேயே இறந்துவிடும் வாய்ப்புள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட செடிகளை உடனே பிடுங்கி அழிப்பதன் மூலம் இந்நோய் பரவாமல் சிறிதளவு தவிர்க்க முடியும். இந்த கொடிய நச்சுயிரி நோய் வெள்ளை ஈ மூலம் பரவுகின்றது.
**கட்டுப்படுத்த**: மஞ்சள் ஒட்டுப்பொறி: வெள்ளை ஈக்கள் நடமாட்டத்தினை கண்காணிக்க நெடுஞ்சாலை மஞ்சள் நிறம் பூசப்பட்ட டப்பாக்களில் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் இரண்டடி உயரக் குச்சிகளில் கவிழ்த்து வைக்க வேண்டும். ஏக்கருக்கு 200 மில்லி டைமீத்தோயேட் அல்லது மானோகுரோட்டோபாஸ் என்ற பூச்சிக்கொல்லியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப் படுத்த முடியும். மருந்துக் கரைசல் பயிரின் பாகங்கள் மற்றும் வெள்ளை ஈக்களில் நன்கு பரவிப் படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால், தனுவெட் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக்கொள்ள வேண்டும். 10-15 நாட்கள் கழித்து மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும்.
கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க பயிரின் வளர்ச்சினைப் பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 400 லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படும். மேலும் உழவர்கள் தங்கள் பயிர் பாதுகாப்பு பிரச்னைகளுக்குத் தக்க ஆலோசனை பெற பாதித்த பயிர் மாதிரியுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பயிர் மருத்துவ நிலையத்தினை நேரில் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.-சா.ஜெயராஜன்,பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் மருத்துவ

நிலையம்,பருத்தி ஆராய்ச்சிநிலையம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

## குரங்குகள் மூலம் தேங்காய் பறிக்க திட்டம்

மே 01,2012,00:00



திருவனந்தபுரம்: மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டம் அறிமுகமானது முதல், நாடு தழுவிய அளவில், விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது.குறிப்பாக, தென்னை மரம் ஏறி தேங்காய் பறிக்க யாரும் வருவதில்லை. அப்படியே வந்தாலும், அவர்கள் கேட்கும் கூலி, விவசாயிகளுக்கு கிலி ஏற்படுத்துவதாக உள்ளது.

தேங்காயை பறித்து, இழப்பை சந்திப்பதை விட, "தானாக காய்த்து விழட்டும், கொப்பரையாவது தேறும்' என்ற மனநிலைக்கு விவசாயிகள் ஆளாகி உள்ளனர். இதனால், ஒரு காலத்தில் தேங்காய் உற்பத்தியில் உச்சத்தில் இருந்த கேரளா, தற்போது தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களை சார்ந்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
என@வ, தேங்காய் பறிக்க, குரங்குகளுக்கு பயிற்சி அளித்து பயன்படுத்தலாமா என்று கேரள வேளாண் அமைச்சகம் திட்டமிட்டு வருகிறது இலங்கை, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் குரங்குகள் மூலம் தேங்காய் பறிப்பது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இந்த முறையைப் பின்பற்றுவதிலும் பிரச்னை உள்ளது. "குரங்குகளை துன்புறுத்தாதே' என பிராணிகள் நல அமைப்புகள் கொடி தூக்கினால் என்ன செய்வது என கேரளா அரசு அஞ்சுகிறது. இதனால், குரங்கு மூலம் தேங்காய் பறிக்கும் திட்டம் பரிசீலனை அளவிலேயே இருந்து வருகிறது.

## எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு உயரும்

மே 02,2012,00:24



புதுடில்லி:நடப்பாண்டு சோயா, கொத்தவரை மற்றும் நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு, இந்த மூன்று எண்ணெய் வித்துக்களின் விலை உயர்ந்ததால், மகிழ்ச்சி அடைந்துள்ள விவசாயிகள், நடப்பாண்டு இவற்றை அதிக பரப்பளவில் பயிரிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொத்தவரை:உணவுப் பொருள்கள், பல்வேறு ரசாயனங்கள் உள்ளிட்டவற்றை தயாரிக்க கொத்தவரை பயன்படுகிறது. இதன் உற்பத்தியில், இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. நாட்டின், ஒட்டு மொத்த கொத்தவரை ஏற்றுமதியில், அமெரிக்கா, ஐரோப்பா, சீனா ஆகிய மூன்று நாடுகளின் பங்களிப்பு 80 சதவீதமாக உள்ளது.ராஜஸ்தான் மாநில விவசாயிகள், கோடை காலமான மார்ச் மற்றும் ஏப்ரலில் முதன் முறையாக கொத்தவரை பயிரிட்டுள்ளனர். இவை, வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படும். இவ்வாண்டு, மழை பொழிவு வழக்கம் போல் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால், கொத்தவரை விளைச்சல் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடகா:பொதுவாக, ஜூலையில் கொத்தவரை நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அக்டோபரில் அறுவடை செய்யப்படும். நடப்பாண்டில், கர்நாடகாவிலும் கொத்தவரை சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக, நடப்பாண்டு, கொத்தவரை பயிரிடும் பரப்பளவு மூன்று மடங்கு உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, இதன் உற்பத்தி 1.20 கோடி மூட்டைகளில் (ஒரு மூட்டை-100 கிலோ) இருந்து 4 கோடி மூட்டைகளாக உயரும் என்று தெரிகிறது.

கடந்த 2011ம் ஆண்டு 35 லட்சம் ஹெக்டரில் கொத்தவரை பயிரிடப்பட்டது. மும்பை சந்தையில், சென்ற மார்ச் மாதம், 100 கிலோ கொத்தவரை விதை, 80 ஆயிரத்து 970 ரூபாயாக உயர்ந்திருந்தது. இது, சென்ற ஆண்டு, இதே காலத்தில், இதன் விலை 8,750 ரூபாய் என்ற அளவில் மிகவும் குறைந்து காணப்பட்டது.

முன்பேர வர்த்தகம்:வேளாண் விளைபொருள் முன்பேர வர்த்தகத்தில்,கொத்தவரை விலை

செயற்கையாக உயர்த்தப்படுவதாக எழுந்த புகாரை அடுத்து, இதன் மீதான முன்பேர வர்த்தகத்திற்கு வேளாண் விளைபொருள் முன்பேர சந்தை ஆணையம் தடை விதித்துள்ளது. எனினும், சர்வதேச அளவில் கொத்தவரைக்கான தேவை அதிகரித்து வருவது தான் இந்த விலை உயர்விற்கு காரணம் என இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர். சர்வதேச பொருளாதார நெருக்கடி நிலையிலும், அமெரிக்கா, ஐரோப்பா, சீனா ஆகிய நாடுகள் அதிக அளவில் வெளிநாடுகளில் இருந்து கொத்தவரையை இறக்குமதி செய்து கொண்டன.

சோயா:சோயா உற்பத்தியும், இவ்வாண்டு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை 101 லட்சம் ஹெக்டரில் சோயா பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன், மேலும் 5-7 லட்சம் ஹெக்டேர் என்ற அளவிற்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, ஒரு குவிண்டால் சோயா, 3,500 ரூபாய் என்ற அளவில் விலை போகிறது. இது, குறைந்த பட்ச ஆதரவு விலையான 1,690 ரூபாயை விட அதிகமாகும்.

இந்த விலை உயர்வால் கவரப்பட்ட விவசாயிகள், பருத்தி சாகுபடியை கைவிட்டு, சோயா உற்பத்திக்கு மாறியுள்ளனர். குறிப்பாக தமிழ்நாடு, கர்நாடகா,மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், வழக்கமான பருத்தி சாகுபடியை நிறுத்திவிட்டு, சோயா பயிருக்கு மாறியுள்ளனர். பாசன வசதி அதிகமின்றி, சுலபமாக வளர்க்கக் கூடியது என்பதாலும், விவசாயிகள் சோயா பயிருக்கு மாறியுள்ளதாக வேளாண்துறையினர் தெரிவித்தனர்.

நிலக்கடலை:சோயா மட்டுமின்றி, நிலக்கடலையிலும் அதிக வருவாய் கிடைப்பதால், அதனை பயிர் செய்வதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, பருத்தி, ஆமணக்கை விட, சோயா மற்றும் நிலக்கடலையில் விவசாயிகளுக்கு கூடுதல் ஆதாயம் கிடைக்கிறது. இதனால் தான் இவற்றின் வேளாண்மையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## கரும்பு வெட்டும் இயந்திரம் செய்முறை விளக்கம்

பதிவு செய்த நாள் : மே 02,2012,04:05 IST

கருத்தை பதிவு செய்ய

காஞ்சிபுரம் : வாலாஜாபாத் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏரிவாய் கிராமத்தில், நாளை "கரும்பு வெட்டும் இயந்திரம்' செயல்முறை விளக்கம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் ஹனீஸ் சாப்ரா விடுத்துள்ள அறிக்கை:ஏரிவாய் கிராமத்தில் நாளை, காலை 11 மணிக்கு, கரும்பு வெட்டும் இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்வது பற்றி செயல் முறை விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் கலந்து கொண்டு, இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறையை அறிந்து, பயன்பெற வேண்டும்.

## மாம்பழம் வரத்து அதிகரிப்பு: விலையில் திடீர் சரிவு

பதிவு செய்த நாள் : மே 02,2012,04:10 IST

சேலம்: சேலம் மாநகருக்கு மாம்பழங்களின் வரத்து அதிரிகரித்துள்ளதால், விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. சேலம் மாநகருக்கு தேவையான மாங்காய், மாம்பழங்கள் ஆட்டையாம்பட்டி, சங்ககிரி, வைகுந்தம், வாழப்பாடி, வராகபடி ஆகிய இடங்களில் இருந்தும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்தும் விற்பனைக்கு வருகிறது.

நடப்பாண்டில் மாம்பழங்களின் விளைச்சலில் குறைந்ததால், ஏப்ரல் முதல் வாரத்தில்தான் மாம்பழ சீஸன் துவங்கியது. தற்போது மார்க்கெட்டுக்கு மாங்காய், மாம்பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. சீஸன் துவங்கிய நிலையில், அதிக விலைக்கு விற்ற அனைத்து மாம்பழங்களின் விலையிலும் நேற்று திடீர் சரிவு ஏற்பட்டது.

கடந்த வாரம் சேலம் பெங்களூரா கிலோ, 120 ரூபாய்க்கு விற்றது, 90 ரூபாய்க்கு விற்கிறது. குண்டு கிலோ 90 ரூபாய்க்கு விற்றது, 70 ரூபாய்க்கு விற்கிறது. இமாம் சந்த் கிலோ 120 ரூபாய்க்கு விற்றது, 90 ரூபாய்க்கு விற்கிறது.

நடுச்சாலை கிலோ 70 ரூபாய்க்கு விற்றது. 50 ரூபாய்க்கு விற்கிறது. குதாதத் கிலோ 60 ரூபாய்க்கு விற்றது, 50 ரூபாய்க்கு விற்கிறது. மல்கோவா கிலோ 110 ரூபாய்க்கு விற்றது, 80 ரூபாய்க்கு விற்கிறது. பங்கனப்பள்ளி கிலோ 70 ரூபாய்க்கு விற்றது, 50 ரூபாய்க்கு விற்கிறது.
செந்தூரா கிலோ 50 ரூபாய்க்கு விற்றது, 30 ரூபாய்க்கு விற்கிறது. கடந்த வாரத்தை விட நேற்று அனைத்து ரக மாம்பழங்களின் விலையில் கிலோவுக்கு, பத்து ரூபாய் முதல் அதிகபட்சமாக, 30 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது.
இது குறித்து சேலம் மாநகர மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் உமாபதி கூறியதாவது:
நடப்பாண்டில் மாம்பழ சீஸன் துவங்கிய நிலையில் அனைத்து ரக மாம்பழங்களின் விலையிலும் உயர்வு ஏற்பட்டு இருந்தது. மாம்பழங்களின் விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லாததால், அனைத்து ரக மாம்பழங்களின் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

தற்போது விற்பனைக்கு வரும் மாம்பழங்கள் நல்ல தரத்துடனும், ருசி மிகுந்ததாகவும் உள்ளது. நடப்பாண்டில் மாம்பழங்களின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லாததால், இதே நிலையில் விலை தொடருமா என்பதை தெரிவிக்க இயலாது, என்றார்.

## குண்டு மல்லி பூ உற்பத்தி அமோகம் அறுவடை செய்ய ஆட்கள் இல்லை

பதிவு செய்த நாள் : மே 02,2012,04:06 IST

பனமரத்துப்பட்டி: சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி பகுதிகளில், குண்டு மல்லி உற்பத்தி சீஸன் துவங்கியுள்ளது. கூலி ஆட்கள் பற்றாக்குறையால், உரிய நேரத்தில் பூ அறுவடை செய்ய முடியாமல், நஷ்டம் ஏற்பட்டு வருகிறது என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், அரளிப் பூ, குண்டுமல்லி, சம்பங்கி, பட்டன் ரோஸ் ஆகிய பூ வகைகள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் பூக்களை, நாள்தோறும் அறுவடை செய்து, சேலம், பெங்களூரு, சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது.

தற்போது, குண்டுமல்லி பூ உற்பத்திக்கு சாதகமான பருவநிலை நிலவி வருவதால், பனமரத்துப்பட்டி, பெரமனூர், காளியாககோவில்புதூர், அடிக்கரை, நல்லியாம்புதூர், பள்ளித்தெருப்பட்டி, களரம்பட்டி, கோம்பைக்காடு, வாழகுட்டப்பட்டி, ஏர்வாடி, மூக்குத்திபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் குண்டுமல்லி உற்பத்தி சீஸன் துவங்கியுள்ளது. செடியில் பூத்துள்ள குண்டு மல்லி பூக்கள் மணம் பரப்பி வருகிறது.
குண்டுமல்லி பூ அதிகாலையில் மலருவதால், காலை 6 மணிக்கு பிறகே செடியில் இருந்து பறிக்க முடியும். வெயில் நன்கு அடித்த பிறகு குண்டு மல்லி பூ பெரியதாக மலரும் தன்மை கொண்டது. இந்நிலையில், கொளுத்தும் வெயில், தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தால், பூப்பறிக்க கூலி ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
குண்டு மல்லி பூ பறிக்க ஒரு கிலோவுக்கு, 30 முதல், 40 ரூபாய் வரை கூலி வழங்கப்படுகிறது. எனினும், பூ பறிக்க கூலி ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பல கிராமங்களில், விவசாயிகளின் குடும்ப உறுப்பினர்கள் மட்டும் பூ பறித்து வருகின்றனர்.
இதுகுறித்து, பெரமனூர் விவசாயி சுந்தரராஜ் கூறியதாவது:
கிராமங்களில், நூறு நாள் வேலை உறுதி திட்ட பணி துவங்கிய பிறகு, விவசாய வேலைக்கு கூலி ஆட்கள் யாரும் வருவதில்லை. குண்டுமல்லி பூ உற்பத்தி சீஸன் துவங்கிய நிலையில், பூ எடுக்க கூலி ஆட்கள் வர மறுக்கின்றனர். நாங்கள், எங்கள் குடும்ப உறுப்பினர்களை கொண்டு பூ எடுத்து வருகிறோம்.
சேலம் மார்கொட்டில், காலையில் ஒரு கிலோ பூ, 120 ரூபாய்க்கும், மாலையில், கிலோ, 40 ரூபாய்க்கும் விற்கிறது. கூலி ஆட்கள் வராததால், காலை நேரத்தில் பூ பறிக்க முடியாமல், மாலையில் மார்கெட்டு பூ கொண்டு செல்வதால், குறைந்த விலைக்கு மட்டுமே விற்க முடிகிறது. பூ உற்பத்தி அமோகமாக இருந்தும், உரிய நேரத்தில் பறித்து மார்கெட்டுக்கு கொண்டு செல்ல முடியாததால், எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

**வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு அமைச்சர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 02,2012,03:55 IST

தர்மபுரி: ""விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, உற்பத்தியை பெருக்க வேண்டும்," என உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் பேசினார்.
நல்லம்பள்ளி யூனியனுக்கு உட்பட்ட எர்ரபையனஅள்ளியில் உழவர் பெருவிழா விழிப்புணர்வு முகாம் நடந்தது. கலெக்டர் லில்லி தலைமை வகித்தார். இதில், விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பழனியப்பன் பேசியதாவது:
தமிழகம் முழுவதும் 15,564 கிராமங்களில் உழவர் பெரு விழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் ஏப்ரல் 13ம் தேதி துவங்கி, 472 கிராமங்களில் இது வரையில் உழவர் பெரு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளது. உழவர் பெரு விழாக்கள் மூலம் பசுமை புரட்சி ஏற்படுத்த முதல்வர் ஜெயலலிதா திட்டமிட்டுள்ளார்.
இங்கு கண்காட்சி, கருத்துக்காட்சிகள், செயல்முறை விளக்கங்கள், படக்காட்சிகள், மாதிரிகள் மூலம் பண்ணை நிர்வாகம், இயற்கை வேளாண்மை, சுற்றுச்சூலலை பாதுகாப்பது, பயிர் சாகுபடி தொழில் நுட்பம், பயிர் சார்ந்த ஒருங்கிணைப்பு, ஊட்டசத்து நிர்வாகம், துல்லிய பண்ணையம் ஆகியவை குறித்து விவசாய பெருங்குடி மக்களுக்கு மக்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.
வேளாண் துறையில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாயிகள் உற்பத்தியை பெருக்கி தங்கள் வருவாயை பெருக்கி கொள்ள வேண்டும்.
இவ்வாறு பேசினார்.
மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அன்பழகன், யூனியன் சேர்மன்கள் முனுசாமி (நல்லம்பள்ளி), நிர்மலா (தர்மபுரி), வேளாண் துணை இயக்குனர் மேகநாதன், உதவி இயக்குனர் வேணுகோபால், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ஜோகி, மாவட்ட கவுன்சிலர் பெரியசாமி, ஒன்றிய கவுன்சிலர் தேவராஜ், பஞ்சாயத்து தலைவர் ராஜசேகர், கால்நடை பராமரிப்பு துணை இயக்குனர் ராஜேந்திரன், உதவி இயக்குனர் வணங்காமுடி, வேளாண் விற்பனை துறை துணை இயக்குனர் செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கி.கிரியில் தொடரும் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 02,2012,02:58 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் கோடை மழை தொடர்வதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து கோடை வெயில் வாட்டி எடுத்து

வந்தது. இதனால், நீர் ஆதாரங்களில் தண்ணீர் வேகமாக வற்றி வந்தது. குறிப்பாக கிருஷ்ணகிரி அணை நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. கடந்த வாரத்தில் அணையின் நீர் மட்டம் 37.85 அடியாக குறைந்தது. இதனால், சாகுபடிக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது.

மேலும் ஜூன் மாதம் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதும் கேள்வி குறியானது. இதனால் விவசாயிகள் கோடை மழையை பெரிதும் எதிர்பார்த்து காத்திருந்தனர். கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக கோடை மழை பெய்ய துவங்கியது. நேற்றும் மதியத்துக்கு மேல் மழை பெய்தது.

தொடர்ந்து கோடை மழை பெய்தால் அணையில் நீர்மட்டம் விரைவாக உயர வாய்ப்புள்ளது. மாவட்டத்தில் சமீப காலமாக பெய்து வரும் கோடை மழையால் மேட்டு பகுதி விவசாயிகள் கோடைகால சாகுபடி பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கோடை வெயிலின் காரணமாகவும், இரவு நேரத்தில் ஏற்பட்டு வந்த மின் வெட்டு காரணமாக தூங்க முடியாமல் அவதிப்பட்டு வந்த பொதுமக்களுக்கு தற்போது பெய்து வரும் கோடை மழையால் ஆறுதல் ஏற்பட்டு உள்ளது. பகல் நேரங்களின் வெயிலின் தாக்கம் குறைந்தும், இரவு நேரங்களில் குளுமையான காற்று வீசி வருகிறது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***சர்வதேச சந்தையில் விலை குறைவால் ரப்பர் இறக்குமதி அதிகரிக்க வாய்ப்பு***



*பி.கே. கிருஷ்ணகுமார்,கொச்சி*

*சர்வதேச சந்தையில் விலை குறைந்து வருவதால், நாட்டின் இயற்கை ரப்பர் இறக்குமதி*

*அதிகரிக்குமென இயற்கை ரப்பர் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இயற்கை ரப்பர் பயன்பாட்டில் முன்னிலையிலுள்ள ஜப்பான் தவிர பிற நாடுகளான அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார சிக்கல்கள் காரணமாக இயற்கை ரப்பருக்கான தேவை குறையும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இருப்பினும், நடப்பு 2012–வது காலண்டர் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், பால் வடிப்பு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதால், நடப்பு மே மாதம் மற்றும் அடுத்து வரும் ஜூன் ஆகிய மாதங்களில் உற்பத்தி 3.9 சதவீதம் அதிகரிக்கும் என தெரிகிறது. சர்வதேச சந்தையில் விலை மேலும் குறையும்பட்சத்தில் உற்பத்தி சற்று குறையலாம் என கூறப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை 2011–12 ஆம் ஆண்டில் இறக்குமதி 9 சதவீதம் அதிகரித்து 2.05 லட்சம் டன்னாக உயர்ந்திருந்தது. இந்த காலகட்டத்தில், உள் நாட்டில் உற்பத்தி குறைந்து போனாதால் பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில் இறக்குமதி அதிகரித்தது.*

*உள்நாட்டு உற்பத்தி 8.99 லட்சம் டன்னாக மட்டுமே இருந்த நிலையில் தேவைப்பாடு 9.66 லட்சம் டன்னாக அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.*

*விலை சரிவு போன்ற சாதகமான அம்சங்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வாகன டயர்கள் தயாரிப்பு நிறுவனங்கள் அதிக அளவில் இறக்குமதி மேற்கொண்டன. இந்நிலை நடப்பு ஆண்டிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*